**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.12** |
| **Name** | **:** | **திருமதி.ஜெயலட்சுமி** |
| **Father's Name** | **:** | **வடிவேல்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.07.2023.**

**முதல் விசாரணை -**

**நான் வயலாத்தூரில் வசிக்கிறேன். விவசாய கூலி வேலை செய்கிறேன். இறந்துபோன சுரேஷ் தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுரேஷ் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். பொங்கல் கழித்து 4,5 நாட்கள் கழித்து 5,6 வருடம் முன்பு சுரேஷ் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். சுரேஷ் பொது இடத்தில் வீடு கட்டக்கூடாது என்று நாகப்பனிடம் கேட்டார். அதற்கு நாகப்பன்**

நீ எதற்கு கேட்கிறாய் என்று கேட்டு சுரேசிடம் அடிக்கடி சண்டைக்கு போவார். பொது இடத்தில் விளையாட்டு மைதானமாக வைத்தால் குழந்தைகள் விளையாட பயன்படும், அந்த இடத்தில் வீடு கட்டக்கூடாது என்று கேட்டார். அதன் பிறகு ஊர் மக்களும் கேட்டார்கள். நாகப்பன், தனசேகர், இளையவேல், ஞானவேல், மற்றும் ஆறு பேரும் நீ இருப்பதால் தான் எல்லோரும் கேட்கிறார்கள், என்றைக்காவது இருந்தாலும் உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லியும், நீ ஒரு குடும்பம் தான் என்று மிரட்டினார்கள். கடப்பாரை கூட கொண்டு போய் வீட்டை இடிக்க சென்றுள்ளார்கள்.

கொடி வணக்கம் அன்று சுசீலா ஷாம்பு வாங்க கடைக்கு போகும்போது ஞானவேல் என்பவர் இவளை அடித்தால் தான் இவள் பிள்ளை வருவான் என்று சொல்லி ஜட்டியுடன் வந்து ரோட்டில் பிரட்டி பிரட்டி அடித்தார். சுரேஷ் மனைவிக்கு இதுகுறித்து எதுவும் தெரியாது. மாமியாரை அடிப்பதை தகவல் சொல்லி ஓடி வந்து பார்த்து தண்ணீர் கொடுத்தார். சுரேஷின் மனைவி அப்போது கர்ப்பிணியாக இருந்தார்.

அதனால் சுரேசின் மனைவிக்கு மயக்கமாகிவிட்டது. சுரேஷின் மனைவிக்கு முதலுதவி கொடுக்க வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். சுசீலா தெருவிலேயே கிடந்தார். மாகரல் ஊரில் இருந்து போன் செய்து கார் வரவழைத்து நான் சுசீலாவையும் சுரேசின் மனைவியையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டேன். சுரேஷ் குடும்பத்திற்கு நான் மட்டும் தான் உறவு. வேறு யாரும் கிடையாது. சுரேஷ் எனக்கு அண்ணன் மகன். எதிரிகளும் எனக்கு உறவினர்கள் தான். அத்தை மகன் உறவு.

அதன்பிறகு தான் எதிரிகள் இந்த பிரச்சனையில் ஈடுபட்டார்கள். அதற்கு நாங்கள் செய்யாருக்கும் தூசிக்கும் சென்று கேஸ் கொடுத்தோம். அதற்கும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றோம். அதற்கு பிறகு தான் இந்த கேஸ் பிரச்சனை. இந்த பிரச்சனை கேள்விப்பட்டு நான் சுசீலா வீட்டிடம் சென்றபோது, சுரேஷ் அன்றைய தினம் வேலைக்கு சென்று போகாமல் வந்துவிட்டார்.

நான் போய் பார்க்கும்போது சுசீலா வீட்டில் சுசீலா வீட்டில் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு பயந்துக்கொண்டு இருந்தார். அப்போது நான் போய் தட்டினேன். சுரேசும் வந்துவிட்டார். சுரேஷ் வந்தவுடன் சுசீலா சுரேசை உள்ளே இழுத்துக்கொண்டு மீண்டும் தாழ்ப்பாள் போட்டுகொண்டார். சுரேஷ் வெளியில் விட கேட்டார். ஆனால் வெளியில் விடவில்லை. அதனால் சுரேஷ் கதவை உடைத்துக்கொண்டு ஹெல்மெட் போட்டுக்கொண்டு தூசி காவல்நிலையத்திற்கு கேஸ் கொடுக்க சென்றார்.

அப்போது யுனிபார்ம் உடன் போறான் பார் போங்கடா நம்பளும் போய் பார்க்கலாம் என்று கத்திக்கொண்டு தடி கத்தி எடுத்துக்கொண்டு போங்கடா என்று சொல்வது நான் பாத்ரூம் பக்கத்தில் இருக்கும்போது கேட்டுக்கொண்டு இருந்தேன். நவநீதம், அமுலரசி ஆகியோர் தான் சொன்னார்கள். நாகப்பன், தனசேகர், இளையவேல், குமரவேல், ஞானவேல் எல்லோரும் வண்டியில் இரு இரு பேராக கத்தி தடி எடுத்துக்கொண்டு சென்றார்கள். உடனே சுசீலா கத்திக்கொண்டு ஓடினார். சுசீலா வடிவேல், விஜயமணி, மோகனவேல் ஆகியோரை கத்திக்கொண்டு அழைத்துச் சென்றார். சுசீலா பின்னால் என்னால் ஓடி முடியவில்லை. நான் பின்னால்

மெதுவாக வந்தேன். அவர்கள் போவதற்கு முன்பு போனவர்கள் சுரேசை வலது பக்கம் வெட்டி போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். போனவர்கள் அதை பார்த்துள்ளார்கள். ஆம்புலன்ஸ் வந்ததை பார்த்து நான் என்ன ஏது என்று கத்திக்கொண்டு அங்கேயே சென்றுவிட்டேன். நான் போவதற்குள் ஆம்புலன்ஸ் சென்றுவிட்டது.

நான் அங்கேயே கத்திக்கொண்டு இருக்கும்போது ஒரு பெண் உதவியுடன் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். அரசு மருத்துவமனையில் பிணவறையில் சுரேசை பார்த்தேன். அடிக்கடி சுரேசை அடிக்க வருவார்கள். சண்டை போடுவார்கள். காலையில் சுசீலா கேஸ் கொடுக்க காவல்நிலையம் சென்றார். பொது இடத்திற்கு பக்கத்திலேயே என் சொந்த இடத்தில் நான் வீடு கட்டியுள்ளேன். அதனால் எதிரிகள் செய்வது எல்லாம் நான் நேரடியாக பார்த்துள்ளேன். இதுசம்பந்தமாக எதிரி நாகப்பன் சிறு சிறு பிரச்சனைகள் செய்வதுண்டு. இருவரும் சொந்தம் என்பதால் நான் யாரிடமும் சொன்னது இல்லை. தற்போது நீதிமன்றத்தில் தான் சொல்கிறேன்.

ஓழுகரையில் சுரேசின் மனைவிக்கு விசேஷத்திற்கு சென்றபோது எதிரிகளில் சிறியவன் என்றையக்காவது இருந்தாலும் உங்கள் மருமகப்பிள்ளை உயிர் எங்கள் கையில் தான் என்று சுரேசின் மனைவி பிறந்தவர் வீட்டில் சொல்லியுள்ளார். சுரேஷ் எதில் சென்றார் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றார். எதிரிகளும் ஸ்கூட்டர் மாதிரி வண்டியில் தான் சென்றார்கள். வண்டி பெயர் எல்லாம் தெரியாது. எங்கு சம்பவம் நடந்தது என்றால் புதுப்பாளையம் காவக்கரையில் நடந்தது.

நான் என் அண்ணன் மகன் இறந்ததில் உடல்நிலை சரியில்லாமல்

இருந்தபோது ஒரு நான்கு ஐந்து நாட்கள் இருக்கும். முத்து என்பவர் உடன் மருத்துவமனைக்கு சென்ற வழியில் போலிசார் புன்னை புதுப்பாளையம் என்ற இடத்தில் விசாரணை செய்துக்கொண்டு இருந்தார்கள். அங்கு அமுலரசியை விசாரணை செய்துக்கொண்டு இருந்தார்கள். அமுலரசியை விசாரித்தபோது அவர் கொலை செய்ததை ஏற்றுக்கொண்டார். அதை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நானும் முத்துவும் கையொப்பம் போட்டோம். அதன் அடிப்படையில் அமுலரசி வீட்டிற்கு எங்களையும் போலிசார் அழைத்துச்சென்றார்கள். நாங்களும் போனோம்.

அமுலரசி ஒத்துக்கொண்டு எழுதியதில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9. அமுலரசி வீட்டில் இருந்து ரத்த கறை படிந்த வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டையை எடுத்துக்கொடுத்தார். அதற்காக போலிசார் எழுதினார்கள். அதற்கு என்னிடமும் முத்துவிடமும் கையொப்பம் பெற்றார்கள். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.10.

நான் பிறகு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். முதல் கையொப்பம் முத்துவுடையது. அமுலரசி எடுத்துக்கொடுத்த வேட்டி, சட்டையை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். நீதிமன்றத்தில் உள்ள வேட்டி சட்டை தான் அவை. வெள்ளை வேட்டி சான்று பொருள் 4. வெள்ளை சட்டை சான்று பொருள் 5.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

ஒழுகரையில் சுரேசின் மனைவி ஊரில் எதிரிகளில் இளையவர் என்றைக்காவது இருந்தாலும் உங்கள் மருமகப்பிள்ளையின் உயிர் எங்கள்

கையில் தான் என்று சொல்லியது சம்பந்தமாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எந்த தேதியில் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் வெட்டி போட்ட தேதி 20ம் தேதி மட்டும் தெரியும். மற்ற தேதி விவரங்கள் எனக்கு தெரியாது. பொங்கல் கழித்து 5,6 நாட்கள் கழித்து நடந்தது.

உடல்நிலை சரியில்லாமல் 4,5 நாட்கள் கழித்து பிறகு என்னை ஒரு நாள் விசாரித்த பிறகு அதற்கு முன்போ அல்லது பின்போ போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் விசாரணை செய்யவில்லை. நான் மருத்துவமனைக்கு சென்று வந்தபிறகு அமுலரசி வீட்டில் தான் இருந்தார் என்றால் அமுலரசி வீட்டில் இருந்தால் நாங்கள் போலிசிடம் சொல்லியிருப்போம்.

போலிசார் விசாரித்தபோது பொது இடமானது குழந்தைகள் விளையாடும் மைதானமாக பயன்படுத்தவேண்டும் என்று சுரேஷ் தடுத்ததையும், அதற்கு ஊர் மக்களும் தடுத்ததற்கு எதிரிகள் நீ இருந்தால் தான் கேட்கிறார்கள், என்றைக்காவது இருந்தாலும் உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொன்னது சம்பந்தமாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

முதல் விசாரணையில் எதிரிகள் செய்கை குறித்து சொன்ன அனைத்தையும் போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரி தான். காவாங்கரையில் துணி எடுத்து கொடுத்ததை மட்டும் சொல்லியுள்ளேன். அமுலரசியை கைது செய்ததது எத்தனை மணி எந்த தேதி என்று எனக்கு தெரியாது என்றால் மணி பகல் 2 மணி இருக்கும். தேதி

தெரியாது. புன்னை கூட்ரோடு என்பது எங்குள்ளது என்றால் புதுப்பாளையம் ரோட்டில் ஒரு பக்கம் புன்னை. மறு பக்கம் புதுப்பாளையம். சாட்சி முத்து எனக்கு என்ன உறவு என்றால் அக்காள் கணவர். சுரேசின் மாமனார்.

அமுலரசி சொன்னதை எழுதியது எத்தனை பக்கம் என்றால் அப்போதிருந்த பதட்டத்தில் எனக்கு ஞாபகம் இல்லை. நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்துப் பார்க்கவில்லை என்றால் போலிசார் படித்துக் காட்டினார்கள். எங்கள் ஊரில் இருந்து புன்னை கூட்ரோடு எவ்வளவு தொலைவு என்றால் கிலோமீட்டர் எல்லாம் எனக்கு தெரியாது. எவ்வளவு நேரத்தில் செல்லலாம் என்றால் வண்டியில் சென்றால் கால் மணி நேரத்தில் செல்லலாம்.

எந்த மருத்துவமனைக்கு செல்ல இருந்தேன் என்றால் புதுப்பாளையம் மருத்துவமனைக்கு செல்வதற்கு சென்றேன். இறந்துபோனவர் என் அண்ணன் மகன் என்பதால் காவல் துறையினர் தயார் செய்த வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரிலும் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அமுலரசி எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அமுலரசிடம் இருந்து எந்தவொரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

நான் இந்நீதிமன்றத்தில் சொன்ன சாட்சியங்கள் அனைத்தும் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையிலும், இறந்தவரின் அண்ணன் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையிலும் சொன்னது என்றால் சரியல்ல.

<u>7 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் மகன் பெயர் விஜயமணி. என் கணவர் வடிவேல். எங்கள் ஊரில்

மணிகிருஷ்ணன் என்ற தலைவர் இருந்தார் என்றால் சரி தான். என் வீட்டை இடித்தது சம்பந்தமாக பஞ்சாயத்து நடந்ததா என்றால் அதெல்லாம் நடக்கவில்லை. தங்கராஜ் என்பவரின் மகள் வளர்மதி எங்கள் ஊரில் இருந்தார் என்றால் சரி தான். மேற்படி வளர்மதி இறந்துவிட்டார் என்றால் சரி தான். வளர்மதி இறக்கும்போது இரண்டு மாதம் கர்ப்பமாக இருந்தார் என்றால் அதெல்லாம் எனக்கு எதுவும் தெரியாது. அவர்கள் வீடு வாசல் பற்றியும் எனக்கு தெரியாது.

( சாட்சி விஜயமணிக்கு எதிராக இந்த சாட்சியிடம் வளர்மதி கர்ப்பம் சம்பந்தமாக எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேள்விகள் கேட்க நீதிமன்றம் கேள்வியை கேட்க அனுமதி மறுக்கப்பட்டது. )

பொது இடத்தில் எதிரிகள் வீடு கட்ட வந்தார்கள் என்று சொல்வது எல்லாம் பொய் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சுரேஷ் யுனிபார்ம் உடன் சென்றது சம்பந்தமாகவும், எதிரிகள் கத்தி, தடி ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வண்டியில் சென்றதும், நவநீதம், அமுலரசி போக சொன்னதும், அதை பாத்ரூம் பக்கத்தில் இருக்கும்போது நான் கேட்டதாக சொன்னது குறித்தும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி தான்.

நான் சொல்வது போல் சம்பவத்தை எதுவும் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், முதல் விசாரணையில் சொன்ன சாட்சியங்கள் அனைத்தும் பொய் சாட்சியம் என்றாலும் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதியில் சொல்லப்படும் சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல.

என் அண்ணன் மகன் இறந்தபிறகு 4,5 நாட்கள் நான் ஊரில் தான்

இருந்தேன். வெளியில் எங்கும் செல்லவில்லை என்றால் சரி தான். ஆஸ்பிட்டல் மட்டும் சென்றேன். நான் மருத்துவமனைக்கு சென்ற தினம் என் மகனும், என் கணவரும் மருத்துவமனைக்கு என்னுடன் வரவில்லை என்றால் சரி தான். முத்து எதற்காக ஊருக்கு வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் அவருடைய மகள் அதாவது சுரேசின் மனைவிக்கு பாதுகாப்பிற்காக வந்தார். போலிசார் என்னை விசாரித்தபோது மருத்துவமனைக்கு வந்ததாக சொன்னேனா என்றால் சொல்லவில்லை.

சுரேசின் வீட்டின் உடைந்த கதவை போலிசார் எடுத்துச் சென்றார்களா என்றால் சுரேஷ் கதவை உடைக்கும் அளவிற்கு உதைத்தார். அதனால் அவர் அம்மா கதவை திறந்துவிட்டார். ஆனால் கதவு உடையவில்லை. முன்னுபின்னான சாட்சியம் போலிசார் சொல்லிக்கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் போட்டேன் என்றால் எழுதிய தாளில் தான் கையொப்பம் போட்டேன். எழுதியதை யார் எழுதினார்கள் என்றால் போலிசார் கைப்பட எழுதினார்கள். அவர்கள் எழுதிய பேனாவில் தான் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.